

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், கீழசீவல்பட்டி எஸ்.எம்.எஸ் மேல்நிலைப்பள்ளியில், கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் (26.09.2024) அன்று விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ், மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், தலைமையில் வழங்கினார். உடன் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பாலுமுத்து உட்பட பலர் உள்ளனர்.

### உதயநிதி ஸ்டாலின், துணை முதலமைச்சர் பொறுப்பினை ஏற்று, மேலும் மேலும்

# ‘திராவிட மாடல்’ ஆட்சியின் மாட்சியை வளர்ப்பார் என்பது உறுதி!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

*சென்னை, அக். 1 -*

**உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்கு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் வாழ்த்துத் தெரிவித்து வெளியிட்ட அறிக்கை வருமாறு:-**



தி.மு.க. அரசில் இளைஞர் நலன் விளையாட்டுத் துறை அமைச்சராகி, அதில் குறுகிய காலத்திலேயே முத்திரை பதித்து சாதனைகளைச் செய்த அமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதலமைச்சர் பொறுப்பினை ஏற்றுச் செயல்படுவார் என்று நமது ‘திராவிட மாடல்’ முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பது பாராட்டி வரவேற்கத்தக்க ஒன்று. சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட சரியான முடிவு ஆகும்.

இயக்கத்தில் அவர் இளைஞரணிச் செயலாளர் பொறுப்பை ஏற்ற பிறகு, தி.மு.க.வில் இளைஞர்களிடையே கொள்கைப் பாசறை அமைத்து, திராவிட இயக்கத்தின் வேர்களை அறிந்து, புரிந்து கொள்ளும் விழுதுகளாக அவர்களைப் பக்குவப்படுத்தும் பயனுறு பாராட்டத்தக்க பணியை மேற்கொண்டார்!

அவரது தேர்தல் பிரச்சார கடும் உழைப்பு, இயக்க முதியவர்களைக் கனிவோடு அவர் பெருமைப்படுத்தல் போன்ற பல நல்ல பண்புகளால், அவர் நாளும் முதிர்ச்சி பெற்று வளர்ந்து கொண்டே உள்ளார்.

இளையர்கள் மட்டுமல்ல, முதியவர்களும், பொதுவானவர்களும் அவரது செயல் திறன் ஆற்றல் கண்டு வியக்கின்றனர் பொறாமைக்காரர்களைத் தவிர.

துணை முதலமைச்சர் பொறுப்பினை ஏற்று, மேலும் மேலும் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் மாட்சியை வளர்ப்பார் என்பது உறுதி!

தி.மு.க. என்ற பேரியக்கத்தினை நல்ல கொள்கை இயக்கமாகவே ஆக்கிடும் அடிப்படைப் பணி அவரது தனித்தன்மையாகட்டும்!

அவர் அடக்கத்துடன் பதவி ஏற்கும் முன் குறிப்பிட்டுள்ளபடி ‘தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, ‘மானமிகு சுயமரியாதைக் காரர்’ கலைஞர் கொள்கைகளின் வழியே செயல்பட்டு, கடமையாற்றுவேன்’ என்ற உறுதியே அவரை நாளும் மெருகேற்றும். அவரது புதிய பொறுப்பேற்பு ஆட்சிக்கும், கட்சிக்கும் புதிய திருப்பத்தைத் தரும் என்று நம்பி தாய்க்கழகமான திராவிடர் கழகம் வாழ்த்தி மகிழ்கிறது.

அதுபோல இளையர்களுக்கு வாய்ப்பு என்ற அடிப்படையில் புதிதாக பொறுப்பேற்கும் அமைச்சர்களுக் கும் நமது வாழ்த்துகள்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தெரிவித்துள்ளார்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு

# மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தமிழ் மாநிலக் குழு வாழ்த்து!

## மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் செய்தி!



*சென்னை, அக்.1-*

புதிதாகப் பதவியேற்றுள்ள துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக் குழு வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

“தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சி.பி.எம். மாநில செயற்குழு சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், தமிழக அமைச்சரவையில் புதிதாக இடம் பெற்றுள்ள அமைச்சர்கள் செந்தில் பாலாஜி, பனமரத்துப்பட்டி ராஜேந்திரன், கோவி. செழியன் ஆகியோருக்கு சி.பி.எம். சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்” என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இளைய சமுதாயத்திற்கு ஒரு விடிவெள்ளியாக ஒளிர்க!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு — தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் நாசர் வாழ்த்து!

*சென்னை, அக். 1 -*

**துணை முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து, அவருக்கு தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் - நடிகர் எம்.நாசர் அவர்கள் எழுதியுள்ள மடலில்,**

**“இளைய சமுதாயத்திற்கு ஒரு விடிவெள்ளியாக ஒளிர்க!” என்று குறிப்பிட்டுள்ளார்.**

நடிகர் சங்கத் தலைவர் நாசர், உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதம் வருமாறு:-



பேரன்பிற்கும் மரியாதைக்குரிய தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, வணக்கம்.

தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினரும், தென்னிந்திய நடிகர் சங்க உறுப்பினருமான தாங்கள் தமிழ்நாடு அமைச்சரவையில் துணை முதலமைச்சராக பதவி ஏற்றுள்ள தங்களுக்கு தென்னிந்திய நடிகர் சங்கம் சார்பாக உள்ளார்ந்த மகிழ்ச்சியையும், மனமார்ந்த பாராட்டுகளையும் மிகுந்த பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும், இளைய சமுதாயத்திற்கு ஒரு விடிவெள்ளி யாக ஒளிரவும் நம் தமிழகத்தை உலகமே உற்று நோக்கும் வகையில் சீரிய முறையில் தங்களின் பணி சிறக்க வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு அம்மடலில், நடிகர் நாசர் குறிப்பிட்டுள்ளார்.

### மீலாது நபித் திருநாளை முன்னிட்டு - செஞ்சி

# பெரிய பள்ளிவாசலில் 2 ஆயிரம் பேருக்கு பொது விருந்து!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

*செஞ்சி, அக். 1-*

மீலாதுநபி பண்டிகை முன்னிட்டு செஞ்சி பெரிய பள்ளிவாசலில் 2000 பேருக்குபொது விருந்து வழங்கும் நிகழ்ச்சியை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சத்தர தெருவில் உள்ள பெரிய பள்ளிவாசலில் மீலாது நபி பண்டிகை முன்னிட்டு பொது விருந்து வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி வட்டஜமாத் தலைவர் எஸ். ஆர். சையத் மஜித் பாபு தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சியில் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு 2000 பேருக்கு பொது விருந்து வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில்பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், கவுன்சிலர் நூர்ஜகான் ஜாபர், ஷமீம் அக்தர், அஸ்லம் ஷரீப், ஜே. எஸ் .சர்தார், சாமியுள்ளா, முபாரக், தொண்டரணி பாஷா, ரசூல், ஹாஜிரஆகியோர்கலந்து கொண்டனர்.காலையில் தொடங்கிய பொது விருந்து நிகழ்ச்சியில் அனைத்து தரப்பு பொது மக்கள் கலந்து கொண்டு அறுசுவை உணவு அருந்தினர்.



தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கலைஞரின் கனவு இல்லம் கட்டுவதற்கு பயனாளிகளுக்கு பணி ஆணைகளை ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் வழங்கினார். உடன் கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம் ஆணையாளர் போஸ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# உதயநிதி, தமிழரின் இதயநிதி!



**பே**ரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டு இன்னும் ஐம்பதாண்டுகளுக்கு இந்தத் தமிழினத்திற்கு தேவைபடுகிறது என்றார்.

அண்மையில் சைதையில் நடைபெற்ற கழக முப்பெரும் விழா, கழக பவளவிழா மாநாட்டில் உரையாற்றிய நமது தலைவர் தளபதியவர்கள், “திராவிட முன்னேற்றக் கழகம் இன்னும் நூறாண்டு பாடு பட வேண்டும்” என்றார்.

ஆமாம்! மண்டுமதங்கள் தமிழினத்தை அண்டாமல் காத்திட, மூடப்பழக்க ஆரிய, சனாதன சங்கிக்கூட்டம் சூழாமல், தடுத்திட, பசிப்பிணி போக்கிட, பகுத்தறிவைப் பரப்பிட, அறியாமை இருள் அகற்றிட, கல்வியறிவில், வேலை வாய்ப்புகளில் கடைசி விளிம்பு நிலை மனிதனும் நிறைவு பெற்றிட கட்டாயம் தமிழ்நாட்டில் தி.மு.க. தொடர்ந்து பணியாற்றிக் கொண்டு தான் இருக்கும்.

இந்த மாபெரும் ஜனநாயக இயக்கத்தை, அடுத்தடுத்து, வழிநடத்த ஆற்றல் மிக்க அடலேறுகள் அடையாளம் காணப்பட்டு, அவையத்து முந்தியிருக்கும் செயல் தலைவர் தளபதி அவர்களால், நிகழ்ந்த படி தான் இருக்கிறது.

அதைப்போலவே பரந்துபட்ட தமிழகத்தின் ஆட்சிக் கட்டிலில் தீட்டப்படும் திட்டங்கள் தேக்கம் சிறிதுமின்றி, அடித்தட்டு மக்களைச் சென்று சேரவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் நமது முதல்வருக்கு துணைநிற்கும் அமைச்சரவையோடு, துணை முதல்வராக நமது இளைஞரணி எழுச்சி நாயகர், மாநில விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஒருமித்த கருத்துடன், ஓயாத பெரும் எதிர்பார்ப்புடன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழகத்தில் நமது உயிரனையத் தலைவர் கலைஞர் அவர்களின் ஐந்தாவது முறையான ஆட்சிகாலத்தில்2009-ல்இன்றைய முதல்வர் துணைமுதல்வராக பொறுப்பேற்று, பணியாற்றியதை நாமறிவோம்.

அதேபோல் அ.தி.மு.க. ஆட்சியில் கூட சில ‘அட்ஜஸ்மெண்டிற்காகவும்,’ துணை முதல்வர் பதவி வழங்கப் பட்டது.

வழக்கறிஞர்

**வெ.அன்புவாணன்**

கொள்கை பரப்பு துணைச் செயலாளர்



இன்றும் இந்தியாவில் பல மாநிலங்களில் கூட்டணி நிலைத்திடவும், குடுமிபிடி சண்டை தவிர்த்திடவுமே துணை முதல்வர் பதவி பயன்படுகிறது.

ஆனால் வழிவழி வந்த தியாக வரலாற்றின், உழைப்பின், இளைஞர் படை எழுச்சியின் ஒருமித்த அடையாளமாகத் திகழும் நமது உதயநிதி அவர்கள் எப்போதோ இப்பொறுப்பை ஏற்பார் என்று எதிர் பார்த்து, இப்போதாவது வந்தாரே என்றே, இளைய தலைமுறையினரோடு, ஆரம்பம் தொட்டு, இந்நாள் வரை, இயக்கம் காத்திடும் எல்லோரும் மகிழ்கின்றனர்.

தலைவர் கலைஞரின் பேரப்பிள்ளையாக, தளபதியவர்களின் வீரப்பிள்ளையாக, இளைஞரணிச் செயலாளர் பொறுப்பேற்ற நாள் முதல், கழகத் தலைமையின் கட்டளையேற்று, சுற்றிச் சுழன்று, வெற்றிக் கதிர்களை அறுவடை செய்து, கழகம் புதிய பொலிவுடன் வலம் வர நாளும் உழைத்து வருபவர்தான் நமது துணை முதல்வர் உதயநிதி அவர்கள்.

நாடாளுமன்ற தேர்தலா? தலைவரோடு நானுமிருக்கிறேன்.

தொகுதிகள் 40 தானே! கவலை வேண்டாம். என்னிடம் இளைஞரை, எளியோரைக் கவர்ந்திடும் சொல்லும் உண்டு! வலியோரை, வாயில் வந்ததை உளறும், வடவோரை ஓடவிடும் ‘கல்லும்’ உண்டு! என சுழன்று, சுழன்று பணியாற்றினார்.

மொத்தத்தில் ஐயா பெரியாரின் துணிவும், பேரறிஞர் அண்ணாவின் கனிவும், அங்கங்கே தலைவர் கலைஞரின் நக்கல், நையாண்டிகளும் சுவைபடவே, சூறாவளி பிரச்சாரம் செய்து பெரும் வெற்றிகளை கழகம் பெற்றிடத் துணை நின்றார்.

உதயநிதி அவர்கள் இளைஞரணி பொறுப்பேற்றுத் தான் இயக்கத்திற்கு வந்தாரா? என்றால் இல்லை!

Born with Silver Spoon எனும் ஆங்கில பழமொழி ஒன்று உண்டு. பிறக்கும் போதே வெள்ளிக்கரண்டியோடு பிறந்தவர் என்று ஒருவரின் செல்வ வளத்தின் பெருமையை சொல்ல பயன்படுத்துவர்.

அதுபோலவே நமது சின்னவர் உதயநிதி அவர்கள் பிறக்கும் போதே இயக்கத்தின் தலைமையை ஏற்று, அவரது தாத்தா தலைவர் கலைஞர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக கர்ஜித்தபடி, காராக்கிர கைதியாக இருந்தார்.

எங்கள் முன்னாள் பேரூர் செயலாளர் கண்ணதாசன் ஒரு தகவலை சொன்னார்,

“1985 ல் இலங்கை தமிழர் பிரச்சினைக்காக நானும், உங்கள் தந்தை கோ.வெற்றிவீரன், அண்மையில் மறைந்த முன்னாள் அமைச்சர் க. சுந்தரம், கும்மிடிப்பூண்டி கி.வேணு, மீஞ்சூர் மிசா. கேசவன், மேலூர் நிலவழகன், பட்டமந்திரி குப்பன், சோழவரம் ஏழுமலை, சண்முகம், பார்த்தசாரதி,, பழவேற்காடு கன்னிமுத்து, ஆரணி குணசேகரன், குருவப்பா போன்றோர் பொன்னேரியில் ஆர்ப்பாட்டம் செய்து, கைதாகி கடலூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தோம்.

அப்போது நமது தளபதியவர்கள் எங்களைப் பார்க்க கடலூர் சிறைச் சாலைக்கு வந்தார். அவரோடு ஏழெட்டு வயது நிரம்பிய உதயநிதி ஸ்டாலின் அவர்களும் உடன் வந்தார் என்பதை பெருமையுடன் குறிப்பிட்டார்.

இத்தகைய வரலாற்று பின்புலமும், தியாக நிகழ்வுகள் பலகொண்ட பாரம்பரிய பெருமைமிகு உதயநிதி அவர்கள் நமக்கு துணை முதல்வராக கிடைக்கப் பெற்றுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற விக்கிரவாண்டி இடைத்தேர்தலில், சக்கர வியூகம் அமைத்து, தான் தேர்தல் பிரச்சாரத்திற்கு செல்லாமல், தனது வார்ப்பாய், நிழலாய் வடிவம் கொண்ட தனது மகன் உதயநிதியை தேர்தல் களமனுப்பி, வெற்றி வாகை சூடிட ஒரு வெள்ளோட்டமிட்டார் நமது தலைவர் தளபதியவர்கள்.

அந்தத் தேர்வில் தேர்ச்சி பெற்றார் நமது உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

எப்படி நமது தமிழக வரலாற்றில், பல்லவ மகேந்திர வர்மனைத் தொடர்ந்து, அவரது மகன் நரசிம்ம பல்லவன் தொண்டை மண்டலத்தை, காஞ்சிபுரத்தை தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தாரோ,

அதே காஞ்சியில், ஆயிரங்காலத்து பயிர் நமது கழகம் என்று சூளுரைத்தப் பேரறிஞர் அண்ணா பிறந்த காஞ்சியிலிருந்து துணை முதல்வர் பொறுப்பிற்கு அறிவிக்கப்பட்டார் நமது உதயநிதி அவர்கள்.

ராஜராஜ சோழன், ராஜேந்திர சோழன் வரிசையில் தமிழகத்தின் தலைமையை அலங்கரிக்கும் தலைவர் கலைஞர், தளபதியவர்களின் பெருமையை, உழைப்பை, தியாகத்தை, போர்க்குணத்தை, எடுத்துச் சொல்ல, இதயத்தில் உறுதியேற்ற உதயநிதி எங்கள் இதயநிதி என்று இளைஞர்கள் எழுச்சிப் பண் இசைக்கின்றனர்.

தலைவர் கலைஞர் வழியில் சனாதனவாதிகளுக்கு சவாலாக நின்றதால்தான் அவரது தலைக்கு விலை வைத்தான் ஒரு தருக்கர் குல தலைவன்.

அவனுக்கும், அவனியில் இன்னும் புரியாதோர்க்கும் சொல்வோம். இது,

“ஓடும் ரயிலை இடைமறித்து, அதன் பாதையில்
தனது தலைவைத்து,
உயிரைத் துரும்பாய்தான் மதித்து,
தமிழ் பெயரைக் காத்த கூட்டமிது!
பரம்பரை ரத்தம் உடம்பிலே தான்,
அது முறுக்கேறிக் கிடக்குது நரம்பிலே தான்.”

வாழ்க தமிழினத் தளபதியவர்கள்!

வாழ்க இயக்கத்தின் எதிர்கால நலன் காக்கும், திராவிட இயக்கங்களின் நாளைய நம்பிக்கை உதயநிதி ஸ்டாலின் அவர்கள்!



திருச்சி மாநகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 35 மண்டலம் மூன்றில் செந்தண்ணீர்புரம் பகுதிக்குட்பட்ட முத்துமணி டவுன் தெருவில் சுமார் 450 வீடுகள் உள்ளது. இந்த பகுதியில் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி ஒன்று அமைத்து தருமாறு பொதுமக்கள் வைத்த கோரிக்கையை ஏற்று அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி புதிதாக கட்டப்பட்ட ரூ 11 லட்சம் மதிப்பீட்டிலான பத்தாயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள புதிய நீர் தேக்கத் தொட்டியை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மண்டல குழு தலைவர் மு.மதிவாணன், உதவி செயற்பொறியாளர் கிருஷ்ணமூர்த்தி, உதவி ஆணையர் சரவணன், பகுதிச் செயலாளர் விஜயகுமார், வட்டச் செயலாளர் ரங்கநாதன், 35 வது வார்டு மாமன்ற உறுப்பினர் சுரேஷ், இளநிலை பொறியாளர் ஜோசப் உட்பட அரசு அதிகாரிகள், பொதுமக்கள் உடன் இருந்தனர்.